17.08.2026

அ.வ.எண். 76/2024

வா.சா.1 – திரு. காளிமுத்து, த/பெ. முருகன்

Solemnly affirmed and sworn by Tmt.A.shanthi Assistant on 17.08.2026 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. வழக்குரை ஆங்கிலத்தில் தான் உள்ளதுஎன்றால் சரிதான். எனவே, வழக்குரை விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி கோவிலின் நிர்வாக குழு தலைவர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வாதி கோவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவோ அல்லது சாட்சியம் அளிக்கவோ தீர்மானம் நிறைவேற்றியுள்ளதா என்றால் ஆமாம். அந்த தீர்மானத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. இன்றைய தேதி வரை அவ்வாறு தீர்மானம் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோவிலுக்கு பட்டா இல்லை என்றால் சரிதான். பட்டா இல்லாததால் அந்த இடம் கோவிலுக்கு சொந்தம் என உரிமை கோர இயலாது என்றால் சரிதான். கோவில் 100 வருடங்களாக உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. அந்த காலத்தில் இருந்து கோவில் வீதியின் பெயர் பெருமாள் கோவில் வீதியாகும். பெருமாள் கோவில் வீதி இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. 360 சதுரடியில் கோவில் இருக்கிறது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா இல்லாத நிலத்திற்கு உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றும், அதனால் வழக்கு பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எவ்வித ஆதாரம் மற்றும் ஆவணம் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், பிரதிவாதிக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொது இடத்தில் கோவில் கட்ட அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான்.

பொய்யாக வழக்கு தாக்கல் செய்து இடத்தை ஆக்கிரமிக்க முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அமைதியான முறையில் சுவாதீனத்தில் உள்ளனர் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்பு ஒரு முறை ரகளை ஏற்பட்டது. ரகளை ஏற்பட்ட போது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதா என்றால் புகார் கொடுக்கப்பட்டது, பின்னிட்டு சமரசம் ஆகி கொண்டோம். என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

குறுக்குவிசாரணைக்காக வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

SD./M.Santhosham
District Munsif, Sulur